# பைபிளில்
# முஹம்மது நபி [ஸல்]

தமிழில்

**S.S.M. ஹுஸைன்**

வெளியிடுவோர்

**நஸாரத் நஷ்ரோ இஷாஅத்**

காதியான்

Tamil translation of the Book **Muhammad in the Bible**
பைபிளில் முஹம்மது நபி (ஸல்)

Author : ..............................................
Translated By : S.S.M. Hussain
Composed By : J. Mohamed Nooruddeen
First Edition : 1985
Second Edition : 1988
Present Edition : 2021
Copies : 500
Publisher : Nazarat Nashr-o-Isha'at, Qadian,
Gurdaspur Dist - 143516
Punjab
Printed at : Fazle Umar Printing Press,
Qadian - 143516

Noorul Islam Toll Free No : 1800-103-2131

Tamil Toll Free No : 1800-425-40000

# முன்னுரை

அகில உலகினுக்கும் அருட்கொடையாகத் தோன்றிய அண்ணல் மாநபி (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றியும் அவர்களைப் பின்பற்றும் சமுதாயத்தைப் பற்றியும் தெளிவான பல முன்னறிவிப்புகள் உலகிலுள்ள பல வேதநூல்களில் காணப்படுகின்றன. மகரிஷி வியாச முனிவரால் எழுதப்பட்ட பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான பவிஷ்ய புராணத்திலும், அதர்வண வேதத்திலும், ரிக் வேதத்திலும், அல்லோபநிஷத்திலும் இப்படிப்பட்ட பல முன்னறிவிப்புகளையும், அடையாளங்களையும் நம்மால் காண முடியும். அதேபோன்று கிறிஸ்தவ வேத நூலான பைபிளின் பழைய ஏற்பாட்டிலும் (துவ்ராத்), புதிய ஏற்பாட்டிலும் (இஞ்சீல்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றி ஏராளமான முன்னறிவிப்புகள் காணப்படுகின்றன.

இதைப்பற்றி திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

“அவர்களிடமுள்ள தவ்ராத்திலும், சுவிசேஷத்திலும் எழுதப்பட்டுக் காணப்படுகின்ற எழுத்தறிவற்ற நபியாகிய இத்தூதரைப் பின்பற்றுவோருக்கு நன்மை செய்யுமாறு அவர் கட்டளையிடவும் தீமையிலிருந்து அவர்களைத் தடுக்கவும் செய்கின்றார்.”

(திருக்குர்ஆன் 7:158)

அதாவது, அரேபியாவின் உம்மீய்யீன்களைச் (எழுத்தறிவற்றவர்களை) சேர்ந்த உம்மீயான இறைத்தூதராகிய ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி பைபிளின் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் ஏராளமான முன்னறிவிப்புகள் இருப்பதாகத் திருமறை கூறுகிறது. அவற்றுள் சிலவற்றை மட்டும் ----------------------------------------------------------------------------------

அவர்கள் ஆங்கிலத்தில் 'Muhammad in the Bible' என்ற தலைப்பில் வெளியிட்டார்கள்.

எனது நெருங்கிய நண்பரான இந்நூலாசிரியர் ............. ...................................... அமெரிக்காவிலும், பல ஐரோப்பிய நாடுகளிலும் அஹ்மதிய்யா இயக்கப் பிரச்சாரகராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அனுமதி பெற்று அமெரிக்காவிலுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அக்காலத்திலும் அவர் உண்மையான இஸ்லாமான அஹ்மதிய்யத்திற்காக அரும் பணியாற்றினார். அண்மையில் அமெரிக்காவில் மரணம் அடைந்தார்.

இச்சிறு நூலை சகோதரர் S.S.M. ஹுஸைன் ஸாஹிப் (மேலப்பாளையம்), நல்ல முறையில் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இந்தச் சிறு நூலில் தொட்டுக் காட்டப்பட்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய உண்மையைப் புரிந்து அதனை ஒப்புக்கொள்ளும் நற்பாக்கியத்தை அல்லாஹ் இந்நூலைப் படிக்கும் சகோதரர்களுக்குத் தந்தருள்வானாக! ஆமீன்.

**மௌலவி முஹம்மத் உமர் H.A.**
**தமிழ்நாடு அஹ்மதிய்யா இயக்கப் பிரச்சாரகர், சென்னை**
**1985**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பகுத்தறிவுப் பரிசோதனை | 1 |
| 2. | வரலாற்றுச் சோதனை | 2 |
| 3. | உன் சகோதரரிலிருந்து ஒரு தீர்க்கதரிசி | 9 |
| 4. | பாரானிலிருந்து தெய்வீக ஒளி | 15 |
| 5. | அவருடைய துதியால் பூமி நிறைந்தது | 18 |
| 6. | சமாதான இளவரசர் | 20 |
| 7. | முடிவுரை | 29 |
| 8. | புதிய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்கள் | 31 |

# பைபிளில் முஹம்மது நபி (ஸல்)

ஒருவர் இறைவன் புறமிருந்து வந்தவர் என்ற வாதத்தை உண்மைப்படுத்துவதற்கு இன்றைய உலகு பகுத்தறிவு ரீதியானதும், வரலாற்று ரீதியானதுமான நிரூபணங்களை எதிர்பார்க்கிறது. இந்தச் சோதனைகள் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உண்மைக்கு முழு அளவில் சான்று பகர்கின்றன.

## பகுத்தறிவுப் பரிசோதனை

அறிவுப் பூர்வமாகச் சிந்திக்கும்போது ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் உலகம், ஒரு தெய்வீக வெளிப்பாடு அருளப்பட்டு அதன் ஆன்மீக வழிகாட்டலெனும் நீர்ச்சுனையிலிருந்து அள்ளிப் பருகவேண்டிய தவிர்க்க முடியாத அத்தியாவசியத்திலிருந்தது என்று தெரிகிறது. வருங்காலம் முழுதும் பின்பற்றத்தக்க முன்மாதிரியான முழுமையான ஒரு வாழ்க்கையை ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் நடத்தினார்கள். மிகுந்த துன்பங்களுக்கு மத்தியில் தமது பிரச்சாரத்தைத் துவக்கினார்கள். அவர்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும் கடும் சித்திரவதைகளையும், எதிர்ப்பையும் சந்தித்தார்கள். ஆனால் அற்புதமான வழியில் இறைவனால் பாதுகாக்கப்பட்டு உதவி செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு முன்னரே அன்னார் கொண்டு வந்த தூதுச் செய்தி முழு அரேபியாவிலும் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டதுடன் மற்ற நாடுகளிலும் வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது.

திரு நபி (ஸல்) அவர்கள் ஏராளமான அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்கள்; எதிர்காலம் பற்றித் தீர்க்கதரிசனங்கள் உரைத்தார்கள். அவர்களின் முன்னறிவிப்புகள், அவர்களின் வாழ்நாளிலேயே நிறைவேறியது மட்டுமின்றி, நமது காலத்திலும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கொண்டு வந்த போதனை அதன் ஆரம்ப காலத்திலிருந்தே எண்ணற்ற மக்களைக் கவரக் கூடியதாயிருந்தது. சுருங்கக்கூறின் தூய நபி முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுச் செய்தி உண்மையிலேயே இறைவன் புறமிருந்து வந்துள்ளது என்பதை எல்லாப் பகுத்தறிவுச் சோதனைகளும் நிரூபிக்கின்றன.

## வரலாற்றுச் சோதனை

நாம் வாழும் இன்றைய உலகு, இன்னொரு வகை சோதனையையும் அதாவது வரலாற்று ரீதியான சோதனையையும் ஓர் இறைத்தூதரிடம் எதிர்பார்க்கிறது. ஒரு புகழ்பெற்ற கத்தோலிக்க பிஷப் அண்மையில் புகழ் பெற்ற பத்திரிகை ஒன்றில் இவ்வாறு எழுதுகிறார்.

“எல்லா மனிதர்களுக்கும், எல்லா நாகரீகங்களுக்கும், எல்லா காலங்களுக்கும் கிடைத்துள்ள வரலாற்றுச் சோதனை இயேசு ஒருவருக்கே பொருந்த முடியும். ஏனெனில் இயேசுவைத் தவிர்த்து, புத்தரைப் பற்றியோ, முஹம்மதைப் பற்றியோ அல்லது வேறு யாரைப் பற்றியோ முன்னறிவிப்புகள் இல்லை. மற்றவர்கள் வந்தார்கள். “இதோ நான் வந்திருக்கிறேன்; என்னை நம்புங்கள்” எனக் கூறினார்கள். இயேசு ஒருவர் மட்டும் இந்த வகையிலிருந்து மாறுபட்டு ‘என்னுடைய வருகையைப் பற்றி

அதன் சிறு விபரம் கூட விடாது கூறப்பட்டுள்ளது' என விடையளிக்கிறார்."

இக்கூற்று ஒரு சவாலாகவும், கவனம் செலுத்த வேண்டியதாகவும் இருக்கிறது. முஸ்லிம்களாகிய நாங்கள் இயேசு ஓர் உண்மையான இறைத்தூதர் என்று நம்புகிறோம். அவருடைய வருகையைப்பற்றி முந்தைய வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப்பற்றி–அவர்களின் வருகையைப் பற்றி–இயேசுவால் மட்டுமின்றி, மோஸேயாலும், இன்னும் பைபிளில் கூறப்பட்ட மற்ற தீர்க்கதரிசிகளாலும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் முன்னறிவிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். உண்மையில் இயேசுவிடமிருந்து உலகிற்குக் கிடைத்துள்ள வார்த்தைகளின்படி, வரப்போகிற ஒரு மாபெரும் தீர்க்கதரிசியைப் பற்றிய நற்செய்தியை அறிவிப்பது அவரது வருகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றெனத் தெரிகிறது.

அவர் காலத்திய மக்கள் தாங்கிக்கொள்ளக்கூடிய அளவிலான போதனைகளைச் செய்வதற்கு மட்டுமே தாம் உலகிற்கு அனுப்பப்பட்டதாக இயேசு மீண்டும் மீண்டும் கூறினார். மனித இனத்தின் கடைசிக் காலம்வரை நீடித்திருக்கக்கூடிய ஒரு பரிபூரணமான போதனையைப் பொருத்தவரையில் அவர் கூறியதாவது:

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும்

உங்களுக்கு நினைப்பூட்டுவார்". (யோவான் 14:26)

புனித நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமே இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியிருக்க முடியும். ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உண்மையில் அவர் நாமத்தினால் அனுப்பப்பட்டவர்தான். ஏனெனில் அவர்கள் இயேசுவின் உண்மைக்குச் சான்று பகர்ந்தார்கள். திருக்குர்ஆன் கூறுவதாவது:

"மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவருக்கு முன்னுள்ள தூதர்கள் மரணமடைந்து விட்டனர்." (திருக்குர்ஆன் 5:76)

வானவர்கள் மர்யம் (அலை) அவர்களிடம் கூறியதாக திருக்குர்ஆன் இவ்வாறு பகர்கின்றது.

"வானவர்கள், மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தனது ஒரு சொல்லின் மூலம் உமக்கு நற்செய்தியினை வழங்குகின்றான். அவர் பெயர் மஸீஹ் ஈஸப்னு மர்யம் என்பதாகும். அவர் (இந்த) உலகிலும் மறுவுலகிலும் கண்ணியத்திற்குரியவராகவும், (இறைவனுக்கு) நெருக்கமானவர்களைச் சேர்ந்தவராகவும் இருப்பார் என்றார்." (திருக்குர்ஆன் 3:46)

இயேசு ஒரு கண்ணியத்திற்குரிய தெய்வீகப் போதகரென்றும், தீர்க்கதரிசியென்றும் அவரது உண்மைக்குப் பரிசுத்த நபி (ஸல்) அவர்கள் சான்று பகர்ந்தார்கள். அவரைச் சபிக்கப்பட்டவர் என்று எண்ணுபவர்களைத் தவறானவர்களென்றும், வழிதவறியவர்களென்றும் அறிவித்தார்கள். அவருடைய போதனையை வழிகாட்டலென்றும், ஒளி என்றும் திருக்குர்ஆன் வர்ணித்துள்ளது.

இதே தீர்க்கதரிசனத்தை இன்னும் விளக்கமாக, இயேசு கூறுகிறார்.

“நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். ......... இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவார். அவர் தம்முடைய சுயமாகப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.” (யோவான் 16:7-14)

இந்தத் தீர்க்கதரிசனம் தெளிவாகக் குறிப்பிடுவது யாதெனில்:

1. இயேசு சென்ற பின் தேற்றரவாளர் வருவார்.
2. தேற்றரவாளர் வந்து பாவத்தைக்குறித்தும், உண்மையைக் குறித்தும், நீதியைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.
3. சகல சத்தியத்திற்குள்ளும் உலகை வழிநடத்துவார்.
4. வெளிப்பாடு மூலம் அவருக்கு அருளப்படும் வேதத்தில் மனித

வார்த்தைகள் இருக்காது.

5. வரப்போகிறவற்றைப் பற்றி முன்னறிவிப்பார்.
6. அவர் இயேசுவை மகிமைப்படுத்தி அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அகற்றுவார்.

மேற்கண்ட தீர்க்கதரிசனத்தை, ஒன்றன்பின் ஒன்றாக நாம் ஆராய்ந்தால், அவை திருநபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியவை என்ற உண்மை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகிவிடும். திருநபி (ஸல்) அவர்கள் இயேசுவுக்குப் பின்னர் வந்தார்கள். வரும் தேற்றரவாளர் இயேசுவின் சீடர்களைக் கண்டித்துணர்த்துவார் எனக் காணப்படுகிறது. எனவே அவர் ஒரு யூதராகவோ கிறித்தவராகவோ இருக்க முடியாது. மற்ற ஜனங்களைச் சேர்ந்தவராக இருந்து அதே நேரத்தில் இயேசுவை மதித்து அவர்மீது மரியாதையை ஏற்படுத்தக்கூடிய ஒருவருக்கே இம்முன்னறிவிப்புப் பொருந்தும். ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு யூதரோ கிறிஸ்தவரோ அல்லர். அவர்கள் இஸ்மவேல் கோத்திரத்தைச் சேர்ந்தவராவார்கள். ஆனால் அவர்களோ இயேசுவின் கண்ணியத்தைப் பாதுகாத்தார்கள். இதைக் குறித்து திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

“அவர்கள் அவரைக் கொலை செய்யவுமில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லவுமில்லை. மாறாக அவர் அவர்களுக்கு (சிலுவையில் இறந்தவரைப் போன்று) சந்தேகத்திற்குரியவராக ஆக்கப்பட்டார். (ஈஸா சிலுவையிலிருந்து உயிருடன் இறக்கப்பட்டதில்) கருத்து வேறுபாடு கொண்டவர்கள் அ(வர் உயிரோடு இறக்கப்பட்ட)தில் நிச்சயமாகச் சந்தேகத்திலேயே இருக்கின்றனர். அவர்களுக்கு அது தொடர்பாக

எந்தவோர் (உறுதியான) அறிவும் இல்லை. ஆயினும் யூகத்தை (மட்டுமே) அவர்கள் பின்பற்றிச் செல்கின்றனர். அவர்கள் இதை (சம்பவத்தின் உண்மையை) முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. (அவர்கள் புரிந்தது தவறாகும்)."

(திருக்குர்ஆன் 4:158)

திருக்குர்ஆன் இவ்விடத்தில், அவருடைய எதிரிகள் திட்டமிட்டிருந்த சபிக்கப்பட்ட மரணத்திலிருந்து இயேசு காப்பாற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுக் கூறுகிறது. அவர்கள் அவரைச் சிலுவையிலறைந்து கொல்வதில் வெற்றி பெற்று விட்டோம் என்ற ஒரு சந்தேகமே அவர்களுக்கு இருந்துவந்தது. ஆனால் அல்லாஹ் அவரைக் காப்பாற்றியதோடு மட்டுமின்றி, அவனுடைய விருப்பத்தைப் பெற்றவர்களுடனும் சேர்த்துக் கொண்டான்.

'வரப்போகின்றவற்றைப் பற்றி அறிவிப்பார்' என்ற வாக்குறுதியைப் பொறுத்தவரை, இஸ்லாத்தின் புனித நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ள அளவுக்கு வேறு எந்த நபியும் வரப்போகின்றவற்றைப் பற்றி அறிவிக்கவில்லை என்று கூறினாலே போதுமானது.

அந்தத் தீர்க்கதரிசனம் மேலும் கூறுகிறது: 'அவர் சுயமாகப் பேசாமல் தாம் கேள்விப்படுகிறதைப் பேசுவார்.' இந்த வர்ணனை பரிசுத்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே பொருந்துவதாகும். புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் இறைவனின் வார்த்தையோடு மனிதவார்த்தை கலக்காத ஒரு புத்தகம் கூடக் கிடையாது. ஆனால் திருக்குர்ஆனில் ஆரம்பம் முதல் முடிவு வரை இறைவசனம் தவிர

வேறொன்றுமே இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வார்த்தையைக்கூட திருக்குர்ஆனில் காணமுடியாது. ஜெரூஸலம் மக்கள் முன் பேதுரு தோன்றியபொழுது, 'மனிதர்களே! சகோதரர்களே! என்னை உங்களிடம் சுதந்திரமாகப் பேச அனுமதியுங்கள்' என்றே கூறினான். யோவான் தன்னுடைய உரையாடல் ஒன்றில், 'உங்கள் சகோதரன் யோவானாகிய நான்', என்றே பேசத் தொடங்குகிறான். இதே முறையில்தான் பிலிப்பும், ஜேம்ஸும் மற்றவர்களும் பைபிளில் பேசக் காண்கிறோம். ஆனால் திருநபி (ஸல்) அவர்களைப் பற்றித் திருக்குர்ஆன் கூறுவதாவது:

"அவர் (தமது சொந்த) விருப்பத்தின்படி பேசவுமில்லை. இது (இறைவனிடமிருந்து) அறிவிக்கப்பெற்ற வஹியாகும்."

(திருக்குர்ஆன் 53:4,5)

அத்தீர்க்கதரிசனம் மேலும் கூறுகிறது: 'எல்லாச் சத்தியங்களுக்குள்ளும் அவர் உங்களை வழி நடத்துவார்.'

ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஒருவர் மட்டும்தான் முழு உலகிற்குமுரியதும், பரிபூரணமானதுமான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாக வாதித்தார்கள். திருக்குர்ஆன் கூறுகிறது:

"இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன்." (திருக்குர்ஆன் 5 : 4)

ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்களிடம் இந்தத் தீர்க்கதரிசனம் எல்லா விதத்திலும் எவ்வளவு தெளிவாக நிறைவேறியிருக்கிறது! இத்தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ள

தேற்றரவாளர் இயேசுவுக்குப் பின் அவரது சீடரிடம் வந்த பரிசுத்த ஆவிதான் என்று கூறி இந்த அதியற்புதத் தீர்க்கதரிசனத்தின் மகிமையை மட்டுப்படுத்த சில சமயங்களில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இது ஒரு வெற்றி பெறாத முயற்சியேயாகும்.

இந்த வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள நபர் 'அவர்' என்ற சுட்டுப் பெயரால் விவரிக்கப்பட்டிருக்கிறார் என்ற உண்மையோடு இந்த வாதம் எவ்வாறு பொருந்தும் என நாம் ஆச்சரியப்பட வேண்டியதிருக்கிறது. அதாவது ஆவியாக இருக்க முடியாது. அப்படியானால் சத்தியஆவி இயேசுவின் பிரிவுக்குப் பிறகுதான் வரவேண்டும் என்று கருதப்படவில்லையா? அவ்வாறாயின், இயேசுவுடன் சத்தியஆவி இருக்கவில்லை எனக் கொள்ளலாமா? எந்த ஓர் ஈடுபாடுள்ள கிறிஸ்தவரும் இந்த அனுமானத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார். புதிய ஏற்பாட்டில் காணப்படாத, பின்னால் பரிசுத்த ஆவியினால் கொண்டுவரப்பட்ட–அந்த சத்தியம் எங்கே? என்றும்கூட ஒருவர் வினவக்கூடும்.

## 'உன் சகோதரரிலிருந்து' ஒரு தீர்க்கதரிசி

உண்மையென்னவெனில், இயேசுவுக்கு முன்னரே மோஸே தீர்க்கதரிசியும் தெளிவான, உறுதியான வசனங்களில் ஒரு மாபெரும் தீர்க்கதரிசியைப் பற்றி முன்னறிவிப்புச் செய்துள்ளார். மோஸே இறைவனுடைய கட்டளையின்படி ஓரேப் மலைக்குச் சென்றபொழுது இஸ்ரவேலர்களை நோக்கி இவ்வாறு கூறினார்.

"உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். அவருக்குச் செவி கொடுப்பீர்களாக!"

(உபாகமம் 18:15)

மீண்டும் மோஸேயை நோக்கி, இறைவன் அருளியதாவது 'உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக, அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்குக் கற்பிப்பதை எல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே, அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்.'

(உபாகமம் 18:18,19)

தமக்குப்பின் நியாயப் பிரமாணம் கொண்டுவர-விருப்பவரும் அதே நேரத்தில் இஸ்ரவேலர்களின் சகோதரர்கள் மத்தியிலிருந்து தோன்றவிருப்பவருமான ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி மோஸே முன்னறிவிப்புச் செய்துள்ளார் என்பது இவ்வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

மோஸே நியாயப் பிரமாணத்தோடு வந்த ஒரு தீர்க்க தரிசியாக இருந்தபடியால், 'மோஸேயைப் போன்றவர்' என்ற வசனத்திலிருந்து, வரவிருப்பவரும், ஒரு நியாயப் பிரமாணம்–ஒரு சட்டம்–கொண்டுவரும் தீர்க்கதரிசியாக இருப்பாரே தவிர ஒரு சாதாரண தீர்க்கதரிசியாக இருக்கமாட்டார்.

ஒரு புதிய சட்டத்தைப் பிரகடனம் செய்வதென்பதற்கு ஒரு புதிய இயக்கத்தை ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவது என்பதே பொருளாகும். ஒரு புதிய மார்க்கச் சட்டம் கொண்டுவரும்

தீர்க்கதரிசி என்பவர் ஒரு சாதாரண போதகரோ, சீர்திருத்தவாதியோ அல்ல என்பது தெளிவு. அடிப்படைக் கொள்கைகளையும் அதே நேரத்தில் விவரமான விதிமுறைகளையும் கொண்ட மிகப் பரந்த ஒரு போதனையை அவர் கொண்டுவர வேண்டும். இயேசு அப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசியா? அவர் மார்க்கச் சட்டம் கொண்டுவந்த ஒருவரா? பழைய ஒரு சட்டத்தை மாற்றுவதற்காக ஒரு புதிய சட்டத்தை உலகிற்குக் கொண்டுவந்தாரா? அவருடைய வார்த்தைகளிலேயே உள்ள பதில் இதோ!

''நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”

(மத்தேயு 5:17,18)

மேலும் இயேசுவின் சீடர்கள்,

“நியாயப் பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல. அவைகளைச் செய்கிற மனுசனே அவைகளால் பிழைப்பான்..... கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.” (கலாத்தியர் 3:12,13) என்று கூறுமளவுக்குச் சென்றார்கள்.

இயேசு ஒரு புதிய நியாயப் பிரமாணம், சட்டம்

கொடுப்பதாக வாதம் செய்யவில்லை. அவருடைய சீடர்களோ சட்டத்தை ஒரு சாபக் கேடாகவே கருதினர். பரிசுத்தத் திருக்குர்ஆனோ அதன் துவக்கத்திலேயே பின்வருமாறு அறிவித்துள்ளது.

“இது முழுமையும், பரிபூரணமுமான கிரந்தம்; அதில் சந்தேகமென்பதற்கே இடமில்லை. பயபக்தியுடையோருக்கு அது வழிகாட்டியாகும்.” (திருக்குர்ஆன் 2:3)

அந்தத் தீர்க்கதரிசனம் மேலும் கூறுவது என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட அந்த ஒருவர், இஸ்ரவேலர்கள் மத்தியிலிருந்து எழுப்பப்பட மாட்டார்; ஆனால் அவர்களின் சகோதரரிலிருந்து எழுப்பப்படுவார். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்ரவேலர்களின் சகோதரர்களாகிய இஸ்மவேலர்களிலிருந்து தோன்றியவராவார்.

இறைவன் அவருடைய வாயில் தன்னுடைய வார்த்தைகளைப் போடுவார் என அது (அத்தீர்க்க தரிசனம்) மேலும் கூறுகிறது. புதிய ஏற்பாட்டின் சுவிசேஷங்களிலுள்ள வார்த்தைகள், இயேசுவின் வாயில் இறைவனால் போடப்பட்டவை அல்ல. அவை அவருடைய கதையையும், அவரும், அவரது சீடர்களும் சொன்னதையும் செய்ததையும் மட்டுமே கூறுகின்றன.

ஆனால் பரிசுத்த குர்ஆனோ “நீர் கூறுவீராக! நான் உங்களைப்போன்ற ஒரு மனிதனே. (ஆனால்) உங்களுடைய (உண்மையான) இறைவன் ஒரே இறைவன் தான் என்று எனக்கு வஹியின் மூலம் அறிவிக்கப்படுகிறது.” (திருக்குர்ஆன் 18:111) என்று அறிவிக்கின்றது.

‘என் நாமத்தினாலே அவர் கூறும் வார்த்தைகளுக்கு’

என்று தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ளது மிக விநோதமாகத் தோன்றும்; மக்களுக்கு அறிவிக்கும்படிக் கட்டளையிட்டு இறைவனிடமிருந்து இயேசு பெற்றதாக உதாரணத்துக்கு ஒரு வார்த்தைகூட கிடையாது. மாறாக திருக்குர்ஆன் இறைவனுடைய வார்த்தையென அவ்வேதநூலே குறிப்பாகக் கூறுகிறது.

தேவனுடைய வார்த்தைகள், வாக்களிக்கப்பட்டவர் ஒரு தீர்க்கதரிசி என்று அறிவிக்கின்றன. கிறிஸ்தவர்களின் நம்பிக்கைப்படி இயேசு தாம் ஒரு தீர்க்கதரிசி என வாதிக்கவில்லை.

மாற்கு கூறுகிறார்: அவர் தமது சீடர்களிடம் 'ஜனங்கள் என்னை யாரென்று கூறுகிறார்கள்! என்று வினவியதற்கு, அவர்கள் யோவான் ஞானஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர்' என்றும் பதில் கூறினார்கள். பிறகு அவர் 'நீங்கள் என்னை யாரென்று கூறுகிறீர்கள்? என்று கேட்டதற்கு பேதுரு அவரைக் கிறிஸ்து எனக் கூறினான். பிறகு அவர் அவர்களிடம் அவரைப்பற்றி யாருக்கும் அறிவிக்க வேண்டாமெனக் கட்டளையிட்டார்.

(மாற்கு 8:27-30)

இவ்வாறு இயேசு தாம் யோவான் ஞானஸ்நானனோ, எலியாவோ, தீர்க்கதரிசிகளில் ஒருவரோ அல்லவென்று மறுத்திருக்கிறார். ஆனால் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு தீர்க்கதரிசி என்பது மட்டுமல்லாமல், மோஸேயைப் போன்றவர், என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் கூறுகிறதாவது,

"நாம் ஃபிர்அவ்னிடம் ஒரு தூதரை அனுப்பியது போன்று,

நிச்சயமாக நாம் உங்களுக்குச் சாட்சியாக இருக்கக்கூடிய ஒரு தூதரை உங்களிடம் அனுப்பியுள்ளோம்" (திருக்குர்ஆன் 73:16)

சுருக்கமாகக் கூறுவதென்றால், இஸ்லாத்தின் நபியவர்கள் தோன்றுவதற்கு ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மோஸே, இறைநியதியின்படி, தம்முடைய சட்டம் இறுதியான சட்டம் அல்லவென்றும் அதைவிட முழுமையான இன்னொரு சட்டம் உலகிற்கு வரவேண்டியதிருக்கிறதெனவும், அதற்காக இறைவன் தன்னுடைய இன்னொரு தூதரை பிற்காலத்தில் அனுப்புவானென்றும் அறிவித்துள்ளார். இந்தத் தூதரே எல்லா உண்மைகளையும் போதித்து அவரே மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்தின் இறுதிக்கட்டத்தை வரையறுக்க வேண்டியதுள்ளது. அதற்காக, உலகம் புதியதொரு வேதத்திற்காகவும், புதிய தூதருக்காகவும் காத்திருக்க நேர்ந்தது.

எனவே திருக்குர்ஆனும், திருநபி (ஸல்) அவர்களும் தீர்க்கதரிசிகளான மோஸேயிக்கும், இயேசுவுக்கும் பிறகு தோன்றி, மனிதருக்கு வழிகாட்டுவதற்கு இறைவன் புறமிருந்து வந்துள்ளதாக வாதிப்பதால், அவ்வாதம் நியாயமானதாகவும், உண்மையானதாகவுமே கொள்ளப்பட வேண்டும். அதனை முற்கால தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி விட்டதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் வெளிப்பாடு தேவைக்கதிகமானதோ, மற்ற வெளிப்பாடுகளுக்கு மத்தியில் தேவையற்ற ஒன்றோ அல்ல. உண்மையில் திருக்குர்ஆன் அருளப்படாவிட்டால் இறைவன் தன் தூதர்கள் மூலமாகச் செய்துள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலேயே போயிருக்கும். உலகம் சந்தேகத்தாலும், விசுவாசமின்மையாலும் பீடிக்கப்பட்டிருக்கும்.

## பாரானிலிருந்து தெய்வீக ஒளி

பைபிளின் தீர்க்கதரிசனங்கள் அதைப் பின்பற்றும் மக்களுக்கு அந்த மாபெரும் தீர்க்கதரிசி, இவ்வுலகில் தோன்றவிருக்கும் பகுதியைக் குறித்தும் எடுத்துரைக்கின்றன. அதாவது,

“கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார். பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார். அவர்களுக்காக அக்னிமயமான பிரமாணம் அவருடைய வலக்கரத்திலிருந்து புறப்பட்டது.” (உபாகமம் 33:2)

இவ்வசனங்களில் மோஸேயிக்கு இறைவனின் மாட்சிமைமிக்க மூன்று தோற்றங்கள் வாக்களிக்கப்பட்டுள்ளன. இதில் முதலாவது மோஸேயின் காலத்தில், சீனாய் மலையில் தோன்றியது. தீர்க்க தரிசனத்தில் வாக்களிக்கப்பட்ட இரண்டாவது தோற்றம் இயேசுவின் அற்புதங்கள் நிகழ்ந்த இடத்தைச் சுற்றியுள்ள உலகின் ஒரு பகுதியான சேயீரில் நிகழவேண்டியதிருந்தது. எனவே, ‘சேயீரிலிருந்து எழுந்தருளி’ என்பது இயேசுவின் வருகையைக் குறிப்பதாகும்.

தெய்வீக மகத்துவத்தின் மூன்றாவது தோற்றத்தின் உதயம் ‘பாரானிலிருந்து’ உண்டாக வேண்டியதிருந்தது. பாரான் (அரபியில் ஃபாரான்) என்பது ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவதரித்த மக்காவிற்கும், அவர்கள் மரணமடைந்த மதீனாவுக்கும் இடையேயுள்ள குன்றுகளின் பெயராகும். பழைய ஏற்பாட்டின்படி, ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின்

மூதாதையரான இஸ்மவேல் இந்தப் பகுதியில்தான் வாழ்ந்தார். பைபிளில் இதனைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தேவன் பிள்ளையுடனே (இஸ்மவேல்) இருந்தார். அவன் வளர்ந்து வனாந்திரத்திலே குடியிருந்து, வில் வித்தையிலே வல்லவனானான். அவன் பாரான் வனாந்திரத்திலே குடியிருக்கையில்..... (ஆதியாகமம் 21:20,21)

ஆபிரஹாமின் சந்ததியினர் அரேபியாவில் வாழ்ந்ததாக சரித்திர, பூகோள சாட்சியங்கள் காட்டுகின்றன. அவர்கள் அனைவரும் மக்காவிற்கும் ஆப்ரஹாமால் கட்டப்பட்ட கஅபா இறை ஆலயத்திற்கும் மிகுந்த மரியாதை செலுத்தினர். அவருடைய மகன் இஸ்மவேல் முதலில் மக்காவில் குடியிருந்தார். தேமா, கேதார் உட்பட இஸ்மவேலின் மகன்களில் பன்னிருவர் பெயர்களையும் ஆதியாகமம் (25:13-16) நமக்குத் தருகிறது.

ஏசாயாவில் நாம் வாசிக்கும் பின்வரும் விஷயம் இதை மேலும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

'அரேபியாவின் பாரம் திதானியராகிய பயணக்கூட்டங்களே! நீங்கள் அரேபியாவின் நாடுகளில் இராத்தங்குவீர்கள். தேமாதேசத்தின் குடிகளே, நீங்கள் தாகமாயிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொண்டுபோய், தப்பி ஓடுகிறவர்களுக்கு அப்பங் கொடுக்க எதிர்கொண்டு போங்கள். அவர்கள் பட்டயங்களுக்கும், உருவின கட்கத்துக்கும் நாணேற்றி வில்லுக்கும் யுத்தத்தின் கொடுமைக்கும் தப்பி ஓடுகிறார்கள், ஆண்டவர் என்னை நோக்கி ஒரு கூலிக்காரனுடைய வருஷங்களுக்கொத்த ஒரே வருஷத்திலே கேதாருடைய

மகிமையெல்லாம் அற்றுப்போம். கேதார் புத்திரராகிய பராக்கிரம வில் வீரரின் தொகையில் மீதியானவர்கள் கொஞ்சம் பேராயிருப்பார்கள் என்றார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதை உரைத்தார்.' (எசாயா 21:13-17)

இந்தத் தீர்க்கதரிசன உரை பரிசுத்த நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வெளியேறிச் சென்ற சுமார் ஒரு வருடத்திற்குப் பின்னர் நடந்த 'பத்ர்' யுத்தத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இந்த யுத்தத்தில் கேதார் குமாரர்களாகிய மக்காவைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களிடம் படுமோசமான தோல்வியைச் சந்தித்தனர். முஸ்லிம் வாள் வீரர்கள், மற்றும் வில் வீரர்களின் பேராற்றலைத் தாங்க முடியாதவர்களாகிய மக்காவாசிகள் ஓர் அவமானகரமான தோல்வியை அடைந்தனர். ஆயுத பலமோ, பிறவசதிகளோ அற்ற குறைந்த எண்ணிக்கை கொண்ட மனிதர்கள் மூலம் அனுபவமிக்க படைத்தளபதிகளால் நடத்தப்பட்ட ஒரு படையை இறைவன் அவமானகரமான தோல்வியடையும்படிச் செய்தான்.

மக்காவாசிகளுடன் ஏற்பட்ட இந்த யுத்தங்கள், மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில், பல ஆண்டுகள் நீடித்த போராட்டத்திற்குப்பின் ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் நுழையும்வரை தொடர்ந்து நடந்தன. இதுவே 'பதினாயிரம் பரிசுத்தவான்கள்' நபிகள் பெருமானார் (ஸல்) புடை சூழ்ந்து வந்த காலமாகும். இறைவனின் தூதுச் செய்தி திருக்குர்ஆனின் வடிவத்தில் முழுமை பெற்றுவிட்டதாக தூய நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். இவ்வாறாக, **'பதினாயிரம் பரிசுத்தவான்களோடு அவருடைய வலக்கரத்தில் ஒரு**

**அக்னிமயமான நியாயப் பிரமாணத்தோடு தேவன் பாரானிலிருந்து பிரகாசிப்பார்**,' என்ற மோஸேயின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. சத்திய ஆவியானவர், 'உங்களை சகல சத்தியங்களுக்குள்ளும் வழி நடத்துவார்' என்ற இயேசுவின் தீர்க்கதரிசனமும்கூட இதன்மூலம் நிறைவேறிவிட்டது. **திருக்குர்ஆன் என்னும் அவரது அக்னிமயமான நியாயப்பிரமாணம் மாமிசத்தின் எல்லா அசுத்தங்களையும் பொசுக்கி, முரட்டு இதயங்களைப் பசும் பொன்னாக மாற்றியது.**

இவ்வற்புதமான தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றி இருக்கமுடியுமா? அவர் பாரானிலிருந்து உதயமாகவில்லை. அவருக்குப் பன்னிரு சீடர்களே இருந்தனர்; பதினாயிரம் பரிசுத்தவான்கள் அல்ல. தப்பியோடிய ஒருவரைப்பற்றி ஏசாயா கூறியுள்ளார். ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தப்பியோடிச் சென்றது அவர்கள் வெளியேறிய அவ்வாண்டிலிருந்தே இஸ்லாமிய வருடத்தைக் கணக்கிடும் அளவுக்கு முஸ்லிம் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## "அவருடைய துதியால் பூமி நிறைந்தது"

இவ்வருகை இயேசுவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஆபகூக்காலும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. பைபிளில் நாம் காண்பதாவது:

"தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வதத்திலிருந்தும் வந்தார்; சேலா அவருடைய மகிமை வானங்களையும் மூடிக்கொண்டது. அவருடைய துதியினால் பூமி

நிறைந்தது. அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது. அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின. அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது. அவருக்கு முன்பாகக் கொள்ளை நோய் சென்றது. அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது. அவர் நின்று பூமியை அளந்தார். அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப் பண்ணினார். பூர்வபர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது. என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது. அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது. கூஷானின் கூடாரங்கள் வருத்தத்தில் அகப்பட்டிருக்கக் கண்டேன். மீதியான் தேசத்தின் திரைகள் நடுங்கின." (ஆபகூக் 3:3-7)

முன்கூறப்பட்ட மூன்றாவது தோற்றம் தேமா தேசத்திலிருந்தும், பாரான் மலையிலிருந்தும் தோன்றும் ஒருவரால் நடக்கப் போகிறதென்பதையே இதுவும் காட்டுகிறது. பூமி முழுவதும் அவருடைய புகழ் நிறைந்திருக்கும். எனவே, இஸ்லாத்தின் தூய நபி (ஸல்) அவர்களுக்கு 'புகழப்பட்டவர்' என்று பொருள்படும் 'முஹம்மது' எனப் பெயரிடப்பட்டது ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல. அன்னாருடைய பெயரைப் போலவே அழகான தோற்றமும் நடத்தையும் உள்ள ஒருவரால் மட்டுமே ஆபகூக்கின் விளக்கமான அறிவிப்புகளுக்குரியவராக அமைய முடியும். மிக அதிகப் பலம் வாய்ந்த பெரும்படை இருந்தும்கூட ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் எதிரிகள், அன்னாரை எதிர்ப்பதில் நாசத்தையும் கொள்ளை நோய்களின் தாக்குதலையும், 'எரிபந்தங்களான காய்ச்சல்' என்னும் அவமானத்தையுமே அடைந்தனர்.

தம்முடைய எதிரிகளோடு மோதிக் கொண்டிருக்கும்

காலத்திலேயே மோஸே மரணமடைந்தார். இயேசு சிலுவையில் அறையப்பட்டார். எனவே, ஆபகூக்கினால் குறிப்பிட்டுள்ளபடி, 'புறஜாதியினரைக் கரையப் பண்ணினார்' என்ற தீர்க்கதரிசனம் குறிப்பிடுவது ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. 'பூர்வபர்வதங்களாகவும், என்றுமுள்ள மலைகளாகவும் அளவற்ற சக்தியோடு காணப்பட்ட அவர்களுடைய எதிரிகள் அடியோடு அழிக்கப்பட்டார்கள். பின்பு 'கூஷானின் கூடாரங்களாகவும், மீதியான் தேசத்தின் திரைச்சீலைகளாகவும்' கூறப்பட்ட அப்போதைய ரோமானிய கெய்ஸரின் கீழிருந்த கானான் தேசம், பரிசுத்த நபி (ஸல்) அவர்களின் தொண்டர்களாகிய கலீஃபாக்களின் காலத்தில் அவர்களிடம் சரணடைந்ததன் மூலம் தங்கள் இரட்சிப்பைக் கண்டது.

## சமாதான இளவரசர்

இப்போது நாம் ஏசாயாவுக்குச் செல்வோம். இதில் வரப்போகும் ஒரு தீர்க்கதரிசியைப்பற்றி–உண்மையில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய– ஏராளமான வசனங்களைக் காண்கிறோம். ஒருவர் உலகிலுள்ள எல்லா நாடுகளையும் அழைப்பதையும், அவை அவரின் அழைப்புக்கு உடனே பதிலளித்த வண்ணம், அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொள்வதையும் பற்றி நமக்கு முன்னறிவிப்புச் செய்யப்படுகிறது. (ஏசாயா 5:26–30)

வாக்களிக்கப்பட்ட அவரைப் பின்பற்றுபவர்கள் யுத்தங்களில் பங்கு கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும் என்று அது குறிப்பிடுகின்றது. இந்தத் தீர்க்கதரிசி தோன்றும் காலத்தில்

பாவத்தினாலும், சீர்கேட்டினாலும், கடலும், கரையும் ஒளிமங்கி இருண்டுவிடுமெனக் கூறப்பட்டுள்ளது. அச்சமயம் தேவன் தனது திருமுகத்தை யாக்கோபின் வீட்டாரினிடத்திலிருந்து திருப்பிக் கொள்வார் என்று ஏசாயா மேலும் கூறுகிறார். (ஏசாயா 8:13-17)

அதன்பிறகு, "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர். ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப் பிரபு எனப்படும், தாவீதின் சிங்காசனத்தையும், அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதன் சமாதானத்துக்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்."

(ஏசாயா 9:6-7)

இந்தத் தீர்க்கதரிசனம் ஐந்து பண்புப் பெயர்களையுடைய ஓர் அரசரைப்பற்றி முன்னறிவிப்புச் செய்கின்றது. அவையாவன,

1. அதிசயமானவர்
2. ஆலோசனை கர்த்தா
3. வல்லமையுள்ள தேவன்
4. நித்தியபிதா
5. சமாதானப் பிரபு

இயேசு எப்பொழுதாவது ஓர் அரசராக இருந்ததுண்டா? இத்தீர்க்கதரிசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள பெயர்கள்

எப்பொழுதாவது அவருக்குக் கூறப்பட்டதுண்டா? தனிப்பட்ட விதத்திலான அவரது பிறப்பின் காரணமாக அவர் அதிசயமானவர் என அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவரை நிராகரிப்போர் அவரது பிறப்பை முறையற்றது என்று கூறிய அதே சமயம் அவரது ஆதரவாளர்கள் அவரது பூர்வீகம் பற்றி சந்தேகத்திலிருந்தனர். மேற்குறிப்பிட்ட வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி அவருடைய வல்லமையை அவர் வெளிப்படுத்திக் காட்டவில்லை. அவரை 'நித்தியபிதா' என்றும் அழைக்கமுடியாது. ஏனெனில் தமக்குப்பின் வரப்போகும் மற்றொருவரைப்பற்றி அவரே குறிப்பிட்டுள்ளார். அவர் ஓர் அரசராகவுமில்லை; உலகிற்குச் சமாதானத்தைக் கொண்டு வரவுமில்லை; அவர் சிலுவையில் அறையப்படும்வரை யூதர்களால் கொடுமைப்படுத்தப்பட்டார். எனவே அவரை சமாதானப் பிரபு என்று அழைப்பது சரியாகாது. அவர் எந்த ஓர் அரசாங்கத்தையும் பெறவில்லை. எனவே 'அவருடைய ராஜ்யம் அதற்கு முடிவில்லை' என்ற வார்த்தைக்கு அவருடைய வாழ்க்கையில் அர்த்தமே இல்லை.

இந்த அடையாளங்கள் அனைத்தும் இஸ்லாத்தின் தூயநபி (ஸல்) அவர்களுக்கே பொருந்துகின்றன.

அன்னாரே ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டியதிருந்தது. எனவே அன்னார் விரும்பாவிட்டாலும் அவர் ஓர் அரசர் என அழைக்கப்படலாம்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் நாமத்தாலும், சாதனைகளாலும் அதிசயமானவரே. தமது திராட்சைத் தோட்டத்தைத் தோட்டக்காரருக்குக் குத்தகைக்கு விட்ட

வீட்டெஜமானனைக் குறித்து இயேசு உவமையாகக் கூறுகிறார். இந்தக் கொடிய மனிதர்கள் மற்ற வேலைக்காரர்களை அடித்து, கொன்று கல்லெறிந்தது மட்டுமின்றி, அவனுடைய மகனையும் அவ்வாறு செய்தார்கள். இதைக் குறித்து இயேசு கூறுவதாவது,

எஜமான் தானே நேரில் வந்து, அக்ரமக்கார விவசாயிகளை அழித்தொழித்து விட்டு, 'ஏற்ற காலங்களில் தங்களுக்குக் கனிகளைக் கொடுக்கத் தக்கவர்களிடம் தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான்.' இது இவ்வாறு நடப்பதற்குக் காரணம்,

'வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளிய கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.'

(மத்தேயு 21:33-44)

அந்த 'அதிசயமானவர்' தோன்ற வேண்டிய வழி இதுவேயாகும். மகன் கொல்லப்படும் பொழுது, வேறொருவர் அனுப்பப்படுவார். அவர் மூலைக்குத் தலைக்கல்லென நிரூபிக்கப்படுவார். அவர் இயேசுவின் கண்களுக்கும் முழு உலகின் கண்களுக்கும் ஆச்சரியமாகக் காணப்படுவார்.

இந்த ஆச்சரியகரமான சாதனைகளைப்பற்றி தாமஸ் கார்லைல் எழுதியுள்ளதை நாம் மேற்கோளாகக் காட்டலாம். அவர் எழுதுகிறார்,

'அது அரேபியச் சமுதாயத்திற்கு இருளிலிருந்து ஒளி பிறப்பதாக இருந்தது. அதன் மூலம் அரேபியா முதன் முதலில் உயிர்பெற்றது. அரேபியர்கள் உலகில் தோன்றிய நாள் முதல் எவரது கவனத்தையும் கவராதவர்களாக பாலைவனங்களில்

அலைந்து திரிந்து கொண்டிருந்த ஆடு மேய்க்கும் ஏழைகளாய் இருந்தார்கள். நம்பிக்கை கொள்ளத்தக்க ஒரு செய்தியோடு ஓர் உன்னதத் தீர்க்கதரிசி அவர்களிடம் அனுப்பப்பட்டார். பாருங்கள்! கவனிக்கப்படாத மக்கள் உலகம் அறிந்தவர்களானார்கள். எளியோர்கள் உலகச் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆயினர். ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் அரேபியா ஒரு பக்கம் கிரனேடா வரையிலும், மறுபக்கம் டெல்லி வரையிலும் பரவிற்று. தீரத்திலும், செல்வாக்கிலும், அறிவுடைமை என்னும் ஒளியிலும் அரேபியா ஒரு நீண்ட நெடுங்காலம் உலகின் ஒரு பகுதி முழுவதும் ஒளி வீசித் திகழ்கிறது. நம்பிக்கை மிகப் பெரியதும் நிலைத்திருக்கக் கூடியதுமாக இருக்கிறது. ஒரு சமுதாயத்தின் வரலாறு, அது நம்பிக்கை கொண்டவுடன் பயனுள்ளதாகவும் ஆன்மீக உயர்வும், மகிமையும் உடையதாகவும் ஆகிறது. இந்த அரபிகளும், முஹம்மது (ஸல்) என்ற மனிதரும், அந்த ஒரு நூற்றாண்டும் ஒரு தீப்பொறியின்மீது வேறொரு தீப்பொறி விழுந்தது போலன்றி, கவனிப்பாரற்ற கருத்த மணல் பூமி; அம்மணல் அத்தனையும் வெடிமருந்து தூள்களாக மாறி டெல்லியிலிருந்து கிரனேடாவரை கொளுந்து விட்டெறியும் வானளாவிய நெருப்பு ஜுவாலையாக மாறியது. நான் கூறினேன்; இந்த மாமனிதர் எப்போதும் வானத்தின் மின்னொளி போலிருந்தார்; மற்ற மனிதர்கள் தங்களுக்குத் தீமூட்டும் எரிபொருள்போல் அவரை எதிர்பார்த்திருந்தனர், பிறகு அவர்களும் அக்னிமயமானார்கள்.'

(தாமஸ்கார்லைல் தமது 'ஹீரோஸ் அண்ட் ஹீரோவொர்ஷிப்' என்ற நூலில்)

வரப்போகிற வாக்களிக்கப்பட்டவருடைய இரண்டாவது

பெயர், 'ஆலோசனை கர்த்தா'. இதுவும் பரிசுத்த நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கே பொருந்தும். ஒரு சமுதாயமே ஆலோசனைக்காக அன்னாரை நோக்கித் திரும்பியது. அவர்களும் மக்களோடு வழக்கமாக ஆலோசனைகள் நடத்தியதோடு, எல்லா முக்கிய விஷயங்களிலும் மக்களோடு கலந்தாலோசனை செய்யவேண்டியதை ஆட்சியாளர்களுக்குக் கட்டாயமாக்கினார்கள். அவர்களுடைய தோழர்கள் அவர்களிடம் வழக்கமாக ஆலோசனை பெற்றுவந்ததாகப் பரிசுத்தத் திருக்குர்ஆன் நமக்கறிவிக்கின்றது. (திருக்குர்ஆன் 58:13)

அந்தத் தீர்க்கதரிசனம் அன்னாரை 'வல்லமையுள்ள தேவன்' என்றும் வர்ணித்துள்ளது. பைபிளில் தீர்க்கதரிசிகள் அடிக்கடி தேவன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். (யாத்ராகமம்– 7:1, 4:16) எப்பொழுதெல்லாம் ஒரு மனிதரைக் குறித்து 'கடவுளைப் போன்றவர்' எனக் கூறப்படுகிறதோ அப்போதெல்லாம் அவர் சர்வ வல்லமையுள்ள கடவுளின் வெளிப்பாடாக இருக்கிறார் என்றே பொருள் கொள்ள முடியும். மீண்டும், திருநபி (ஸல்) அவர்களே தீர்க்கதரிசனத்தின் விளக்கத்திற்கு விடையாக அமைந்துள்ளார்கள். இதற்குத் தொடர்பான பல குறிப்புகள் திருக்குர்ஆனில் காணப்படுகின்றன. பத்ர் யுத்தக்களத்தில், நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் ஒரு கைப்பிடி அளவு மணலை அள்ளி, ஓர் அடையாளமாக அதை எதிரிகளை நோக்கி எறிந்தார்கள். அது எதிரிகளை நிலைகுலையச் செய்து, அவர்களுக்குத் தோல்வியைத் தரக்கூடிய ஒரு புழுதிப் புயல் ஏற்பட இதுவே காரணமாயிற்று. இதைப்பற்றி, இறைவன் திரு நபி (ஸல்) அவர்களை நோக்கிக் கூறுகிறான் :

"நீர் எறிந்தபோது, நீர் எறியவில்லை; மாறாக, அல்லாஹ்வே எறிந்தான்". (திருக்குர்ஆன் 8:18)

மீண்டும் இறைவன் கூறுகிறான் :

"நிச்சயமாக விசுவாசம் கொள்வதாக உம்மிடம் சத்தியம் செய்பவர்கள், உண்மையில் இறைவனிடமே சத்தியம் செய்கின்றனர்". (திருக்குர்ஆன் 48:11)

இவ்வாறு நபியவர்கள் வாழ்நாளிலேயே அவர்களுடைய எல்லா எதிரிகளையும், அடக்கி, எதிர்ப்புகளை எல்லாம் நசுக்கியதன் மூலம், வல்லமையுள்ள தேவனின் வல்லமையுள்ள தோற்றம் வெளிப்படுத்தப்பட்டது.

தீர்க்கதரிசனத்தில் அவருக்குக் கூறப்பட்டுள்ள நான்காவது பெயர் நித்தியபிதா, இயேசு, 'காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேலர்களுக்காக மட்டுமே அனுப்பப்பட்ட தூதராதலால், அவருக்கு என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒரு நித்தியத்தன்மை இருக்க முடியாது. இதற்கு மாறாக, ஹஸ்ரத் முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப்பற்றி, 'மனித இனத்தை ஒன்று சேர்ப்பவர்' என்று இறையறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. (திருக்குர்ஆன் 34:29)

அவர்களுடைய போதனைகள் என்றென்றும் மக்களிடம் நிலைத்திருக்கும் என்று அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், பிற்காலத்தில் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவோரிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார்; அவர் இஸ்லாத்தின் போதனைகளை மீண்டும் புத்துயிர் பெறச்செய்து, நபி (ஸல்) அவர்களின் ஆன்மீக ஆட்சி என்றும் நீடிக்குமாறு செய்வார். இப்போது நபி (ஸல்) அவர்களைப்

பின்பற்றுவோரைத் தவிர வேறு ஆன்மீகப் போதகர்கள் தோன்றமாட்டார்கள்.

அந்தத் தீர்க்க தரிசனத்தில் கூறப்பட்டுள்ள ஐந்தாவது அடைமொழி 'சமாதானப் பிரபு' என்பதாகும். உண்மையிலேயே இயேசுவை அவ்வாறு அழைக்க முடியுமா? தமது வாழ்நாளில் அவர் ஓர் அரசராக ஆகவில்லை. தம்முடைய எதிரிகளுக்கு மன்னிப்பு வழங்குமளவுக்கு அவர் ஆட்சியதிகாரத்தைப் பெறவில்லை; எனவே தாம் போதித்தவற்றை நடத்திக் காட்டுவதற்கு சந்தர்ப்பமே இல்லை. மாறாக, ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மார்க்கமே, 'சமாதானம்' என்று பொருள்படும் இஸ்லாம் என்றழைக்கப்படுகிறது. சமாதானத்தை ஏற்படுத்துவதையும், மன்னிக்கும் தன்மையைப் பொருத்தவரையிலும் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்க்கையில் ஏராளமான ஆதாரங்கள் காணக் கிடைக்கின்றன. நீண்ட பதிமூன்று ஆண்டுக்காலமாக திரு நபி (ஸல்) அவர்களும், அவர்களைப் பின்பற்றிய உறுதிமிக்கச் சிறுகூட்டமும், மக்காவாசிகளின் மிகக் கொடூரமான துன்பங்களையெல்லாம் கௌரவத்தோடும், பொறுமையோடும் தாங்கிக் கொண்டனர். பசி, பட்டினி, சாட்டையடி, கேலி, இழிவு, அவமரியாதை போன்ற உணர்வுகளைத் தூண்டக்கூடிய எல்லாவகையான துன்பங்களையும் தருவதே அந்நாளைய நிலைமையாயிருந்தது. உத்தமத் திரு நபி (ஸல்) அவர்கள் மதீனாவைப் புகலிடமாகக் கொண்டு விட்ட போது கூட அங்கும் அவர்களை சமாதானத்தோடு இருக்கவிடவில்லை. ஏழு வருடங்களுக்கும் அதிகமாக அரைப்பட்டினியாகவும், போதிய ஆடைகளின்றியும்,

போதுமான ஆயுதங்களின்றியும் இருந்த முஸ்லிம்கள் மீது மக்காவாசிகள் தாக்குதலைத் தொடர்ந்தனர். இந்த மிருகத்தனமான கொடுமைகளையெல்லாம் இருபதாண்டுகாலம் தாங்கியபின், ஒருநாள் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் பதினாயிரம் பரிசுத்தவான்களின் தலைவராக யுத்தம் செய்யாமல், ஒருதுளி இரத்தம் கூடச் சிந்தாமல் பாரானின் உச்சியில் தோன்றினார்கள். மக்காவாசிகளின் அந்நாளையக் கொடுமைகளை ஒப்பிடும்போது என்ன தண்டனை கொடுத்தாலும் அது மிகக் குறைவே என்றாலும் திரு நபி (ஸல்) அவர்கள் கண்ணியத்தோடும், தயையோடும் பின்வருமாறு அறிவித்தார்கள்.

'உங்கள்மீது எந்தவிதமான பழிவாங்குதலும் இருக்காது. நீங்கள் சுதந்திரமானவர்களாகச் செல்லலாம்.' (திருக்குர்ஆன் 12:93)

கிறிஸ்தவர்கள் தாங்கள் அதிகாரத்திற்கு வந்தபொழுது இதே விதத்திலா தங்கள் எதிரிகளை நடத்தினார்கள்? இயேசுவா? ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களா? யார் உண்மையான சமாதானப் பிரபுவாக அழைக்கப்பட வேண்டும்? இயேசுவால் மற்றவர்களுக்கு சமாதானத்தைத் தரமுடியவில்லை. அவருடைய சீடர்கள் அதைத் தரக்கூடிய தகுதியில் இருந்தும் அவர்கள் அதைத் தரவில்லை. இஸ்லாம் தந்த தூய நபி (ஸல்) அவர்கள் தமது எதிரிகளைத் தண்டிக்கும் சக்தி பெற்றிருந்தபோதிலும் மன்னிப்பதையே தேர்ந்தெடுத்தார்கள். எனவே ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களே ஏசாயா தீர்க்கதரிசியின் முன்னறிவிப்பிலுள்ள 'சமாதானப் பிரபு' ஆவார்கள். மேலும் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஓர் அரசாட்சியைப்

பெற்றவர்களாயிருந்த காரணத்தால் அத்தீர்க்கதரிசனத்தின் கடைசிப்பகுதியாகிய, அவருடைய இராஜியத்தையும் அவர் திடப்படுத்தி,.. ..... அதன் சமாதானத்துக்கும் முடிவில்லை என்பதையும் அவர்களாலேயே பூர்த்தி செய்ய முடிந்தது.

## முடிவுரை

இவை, உலகத்தைச் சகல சத்தியங்களுக்குள்ளும் வழிநடத்தப்போகிற ஒரு மாபெரும் தீர்க்கதரிசியின் தோற்றம் பற்றி பைபிளில் காணப்படும் பல முன்னறிவிப்புகளில் சிலவாகும்.

சாலமனின் வார்த்தைகளில், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) 'முற்றிலும் அழகானவர்' (சாலமனின் உன்னதப்பட்டு 5:10-16) ஆக இருந்தார். இதற்கு எபிரேய மொழியில் 'முஹம்மதேம்' என்று கூறப்படுகிறது. அவரே தானியேலின் கனவில் வந்த 'கல்'லாக இருந்தார். (தானியேல் 2:34,35) அவரே இயேசுவால் கூறப்பட்ட திராட்சைத் தோட்ட எஜமானரின் வருகையாகவும் இருந்தார்.

இயேசுவைப் பற்றிய சில தீர்க்க தரிசனங்களும் பழைய ஏற்பாட்டில் இருப்பது உண்மையே! ஆனால் அவற்றுள் பல தீர்க்கதரிசனங்கள் அவருக்கு பொருந்துவதாக இல்லை என்பதும் உண்மையே! இத்தீர்க்க தரிசனங்கள் ஒரு புதிய மார்க்கச் சட்டத்தோடு வருகின்ற இஸ்ரவேலரின் காணாமற்போன ஆடுகளுக்கு மட்டும் வராமல், முழு உலகத்திற்காகவும் வந்த- 'சத்திய ஆவி' 'தேற்றரவாளர்' என ஏசுவால் கூறப்பட்ட ஒருவரால் தான் நிறைவேற முடியும். பிஷப் ஷீனும், பைபிளைப்

பின்பற்றுகின்ற மற்றவர்களும் அவசியமெனக் கூறிய ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றிய எதிர்பார்ப்புகள் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளன. இத்தீர்க்க தரிசனங்கள் நிறைவேறியதன் மூலம் பரலோக இராஜியத்தின் கதவு திறக்கப்பட்டுள்ளது. தனது இராஜியத்தினுள் நுழையவும், தனது ஐக்கியத்தைப் பெறவும் வானம், பூமி ஆகியவற்றின் அதிபதியான ஏக இறைவன் விடுக்கும் அழைப்பை ஏற்பவர்களே பாக்கியவான்கள்.

நமது இறுதிக் கருத்து 'எல்லாப்புகழும் சர்வலோக ரட்சகனாகிய இறைவனுக்கே உரியது!'

## புதிய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்கள்

இஸ்லாத்தைத் தந்த புனித நபியவர்களைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களின் பக்கம் இப்போது நாம் திரும்புவோம்.

(அ) மத்தேயு 23:38-39ம் வசனத்தில் காணப்படுவதாவது:

"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."

இயேசு தம் மக்களைவிட்டுப் பிரியப்போகிறார் என்றும், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்-பட்டவர்" என்று அவர்கள் கூறும்வரை அவரது மக்கள் அவரைக் காண இயலாதவர்களாய் இருப்பார்கள் என்றும் இவ்வசனங்களுக்குப் பொருளாகும்.

இங்கு இருவரின் தோற்றங்களைப் பற்றித் தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது. ஒன்று இயேசு பிரிந்து சென்ற பிறகு; இது தேவனின் தோற்றத்தை ஒத்ததாயிருக்கும். மற்றொன்று இயேசுவே இரண்டாம் முறையாகத் தோன்றுவதாகும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் வராதவரையில் இயேசுவின் இரண்டாம் வருகை நிறைவேறாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் மோசேயைப் போன்றவர் என்று நாம் முன்னர் நிரூபித்துள்ளோம்.

இயேசுவின் தீர்க்க தரிசனத்திலிருந்தும் புனித நபிகள் பெருமானார் மூலம் இஸ்லாம் தோன்றுவது பற்றிய உறுதியான அறிவிப்பிலிருந்தும் இயேசுவின் வருகையானது தெய்வீக திட்டத்தில் ஆன்மீக முன்னேற்றத்தின் இறுதி நிலையைச்

சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் எவ்விதச் சந்தேகத்திற்கும் இடமின்றி அறிந்து கொள்கிறோம். கர்த்தரின் நாமத்தினாலே வரும் ஒருவரின் தோற்றமே இறுதிக் கட்டத்தைக் குறிப்பதாகும். அவருக்குப் பிறகு இயேசு மீண்டும் வரவேண்டும் என்றோ, ஆன்மீக முன்னேற்றத்தின் இறுதிக் கட்டத்தை இயேசுவின் வருகையே சுட்டிக்காட்டும் என்றோ கூறமுடியாது. இயேசுவே இவ்விஷயத்தைக் குறித்துத் தெளிவாகக் கூறிவிட்டார். 'கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள்' என்று அன்னார் சொல்லிவிடவில்லையா?

மோசேயிக்கு ஒப்பானவரை முதலில் ஏற்று ஒப்புக் கொண்டிருப்போர் மட்டுமே இயேசுவின் இரண்டாம் வருகையின் போது அவரைக் கண்டு ஏற்று ஒப்புக் கொள்வார்கள். மோசேயிக்கு ஒப்பானவரை மறுப்பவன் இயேசு இரண்டாம் முறையாக வரும்போது அவரை இனம் கண்டுகொள்ள இயலாதவனாகவே இருப்பான். ஏன் அப்படி? இயேசு மீண்டும் ஒருமுறை வரும்போது அவர் மோசேயிக்கு ஒப்பானவரைப் பின்பற்றியவர்களுக்கு மத்தியிலே காணப்படுவார். இதனாலேயே, மோசேயிக்கு ஒப்பானவரிடத்தில் முதலில் விசுவாசம் கொண்டிருப்பவர்களால் மட்டுமே இயேசுவின் இரண்டாம் வருகையில் விசுவாசம் கொள்ள இயலும். எனவே இயேசு இரண்டாம் முறையாக வரும்போது ஒரு சுதந்திரமான மதபோதகராய் இருக்க மாட்டார். மோசேயிக்கு ஒப்பானவருடைய பிம்பத்தில் சிறிதும் பிறழாமல் அவரைப் பின்பற்றுபவராகவுமே அவர் இருப்பார். ஆதலால் ஆன்மீக முன்னேற்றமானது இறுதிக் கட்டத்தை எய்திவிட்டது என்ற உண்மை இந்த மோசேயிக்கு ஒப்பானவராலேதான் சுட்டிக்காட்டப்படுமேயன்றி

வேறு எவராலுமல்ல.

யோவான் 16:7-14ல் இவ்வாறு வருகிறது:

"நான் உங்களுக்கு உண்மையாகச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."

"அவர் வந்து, பாவத்தை குறித்தும் நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்."

"இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப் படுத்துவார்."

இயேசு பிரிந்து சென்ற பிறகு தேற்றரவாளர் வருவார் என்று இத்தீர்க்கதரிசனம் உரைக்கின்றது. தேற்றரவாளர் வரும்போது இவ்வுலகத்தைப் பாவத்தைக் குறித்தும், சத்தியத்தைக் குறித்தும், நியாயத்தைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். இயேசுவின்மீது விசுவாசம் கொள்வதற்காக யூதர்களைக் குற்றம் சாட்டுவதால் பாவத்தைக்குறித்து அவர் கண்டித்து உணர்த்துவார். இயேசு

உயிர்த்தெழுந்தது பற்றிய தவறான நம்பிக்கையைத் திருத்துவதாலும், நசரேனாகிய இயேசு இஸ்ரவேலர்களுக்காகத் தோன்றிய போதகரான இயேசு-அதே சடலத்தோடு மீண்டும் இவ்வுலகிற்கு வரமாட்டார் என்று இவ்வுலகிற்கு உறுதி கூறுவதாலும் சத்தியத்தைக் குறித்து அவர் கண்டித்து உணர்த்துவார். சாத்தானிய சக்திகள் அனைத்தையும் ஒழித்துக் காட்டுவதால் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் அவர் கண்டித்து உணர்த்துவார். சத்திய ஆவி வரும்போது அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் என்றும், அவருக்கு அருளப்பெற்ற வேதநூலில் மனிதனின் சொற்கள் எதுவுமிராது என்றும் வரவிருப்பனவற்றை அவர் முன்னறிவிப்பார் என்றும், இயேசுவை மகிமைப்படுத்தி எல்லாக் குற்றச்சாட்டுகளை விட்டும் அவரை விடுவிப்பார் என்றும் அத்தீர்க்க தரிசனம் இன்னும் கூறுகிறது.

எவ்விதத் தவறுக்கும் இடமின்றி இத்தீர்க்கதரிசனம் புனித நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கே பொருத்தமாயுள்ளது. இயேசு பிரிந்து போகாவிட்டால் தேற்றரவாளன் வர இயலாது என்று இத்தீர்க்கதரிசனம் மிகத் தெளிவாகக்கூறுகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 3:21,22 லிருந்து உபாகமம் 18:18ல் வாக்களிக்கப்பட்ட தீர்க்கதரிசியானவர் இயேசுவின் பிரிவுக்கும், அவரது இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றவிருக்கிறார் என்று தெரியவருகிறது. எனவே தேற்றரவாளர் என்பவர் 18:18-ல் வரும் வாக்களிக்கப்பட்டவரைத் தவிர வேறு எவருமல்லர்.

(Introduction to the study of the Holy Qur'an)

* * * * * * *